நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் : 30.06.2021

2021-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30.06.2021-ஆம் தேதி புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் அவசரக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

சத்தியமங்கலம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்.1,2,17 முதல் 22 வரையுள்ள பகுதியில் 01.06.2021 முதல் 30.06.2021 வரை வெளிகொணர்வு (outsourcing) முறையில் பணி நீட்டிப்பு செய்து 50 தூய்மை பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். தற்போது 30.06.2021 உடன் ஒப்பந்த காலம் முடிவடைகிறது. ஊரடங்கு கட்டுப்பாட்டு அமுலில் உள்ளதால், புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கிட இயலாத சூழ்நிலை உள்ளது.

கொரோனா பொருந்தொற்று மத்திய அரசால் பேரிடாக 25.03.2020 முதல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முழு ஊரடங்கு அமுலில் உள்ளதை தொடர்ந்து அந்நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பேரிடர் மேலாண்மை, ஈரோடு ஆட்சித்தலைவர் அவர்கள் நகராட்சி பகுதியில் கொரோனா நோயைக்கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தெரிவித்துள்ளார்.

மேலும், Director of Public Health and Preventive Medicine, Chennai-6 அவர்களின் கொரோனா நோய் தொற்றை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கியுள்ளளார்.

தற்போது ஈரோடு மாவட்டம் வகை 1-ல் வருவதாலும், கொரோனா நோய் பெருந்தொற்றை கொரோனா தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் உள்ளபடி நடவடிக்கை மேற்கொள்ளவும் திடக்கழிவுகளை கையாளவும் மேற்கண்ட 50 தூய்மைப் பணியாளர்களை வழங்கி வரும் தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் ஒரு மாத காலம் மட்டும் 01.07.2021 முதல் 31.07.2021 வரை பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 8,16,000/-க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. கொரோனா நோய் பொரும் தொற்றினை தடுக்க பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 137/2020/எச்.1)

தீர்மானம் எண் : 613 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

**பொருள் : 2**

சத்தியமங்கலம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்.11,12,23 முதல் 27 வரையுள்ள பகுதியில் 01.04.2021 முதல் 30.06.2021 வரை வெளிகொணர்வு (outsourcing) முறையில் பணி நீட்டிப்பு செய்து 55 தூய்மை பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கொரோனா நோய் தொற்று தடுப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். தற்போது 30.06.2021 உடன் ஒப்பந்த காலம் முடிவடைகிறது. ஊரடங்கு கட்டுப்பாட்டு அமுலில் உள்ளதால், புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கிட இயலாத சூழ்நிலை உள்ளது.

கொரோனா பொருந்தொற்று மத்திய அரசால் பேரிடாக 25.03.2020 முதல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து முழு ஊரடங்கு அமுலில் உள்ளதை தொடர்ந்து அந்நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பேரிடர் மேலாண்மை, ஈரோடு ஆட்சித்தலைவர் அவர்கள் நகராட்சி பகுதியில் கொரோனா நோயைக்கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தெரிவித்துள்ளார்.

மேலும், Director of Public Health and Preventive Medicine, Chennai-6 அவர்களின் கொரோனா நோய் தொற்றை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

தற்போது ஈரோடு மாவட்டம் வகை 1-ல் வருவதாலும், கொரோனா நோய் பெருந்தொற்றை கொரோனா தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் உள்ளபடி நடவடிக்கை மேற்கொள்ளவும் திடக்கழிவுகளை கையாளவும் மேற்கண்ட 55 துாய்மைப் பணியாளர்களை வழங்கி வரும் தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் ஒரு மாத காலம் மட்டும் 01.07.2021 முதல் 31.07.2021 வரை பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 8,98,000/-க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. கொரோனா நோய் பொரும் தொற்றினை தடுக்க பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண். 1304/2019/எச்.1)

தீர்மானம் எண் : 614 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 3

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு பேரிடர் மேலாண்மை கொரோனா வைரஸ் நோய் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கையாக நகராட்சி பகுதியில் 100 வீடுகளுக்கு ஒரு கணக்கெடுப்பாளர் மூலம் கொரோனா நோய் தொற்று அறிகுறிகளுடன் இருப்பவர்களை கண்டறிந்து அவர்களுக்கு RTPCR பரிசோதனை செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் செயல்முறை ஆணை ந. க. எண். 8100/2020/பே.மே நாள்.16.05.2021-ல் தெரிவித்துள்ளார்கள். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுறுத்தலின்படி கணக்கெடுக்கும் பணிக்கு தன்னார்வலர்களை (Volundeers) பயன்படுத்திக் கொள்ளவும், அவ்வாறு கணக்கெடுக்கும் பணிக்கு செல்லும் நபர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.250/- மட்டும் ஊக்கத்தொகை வழங்க உத்தரவிட்டுள்ளார். சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் 9910 குடியிருப்பு பகுதிகள் உள்ளன. 100 கணக்கெடுக்கும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். 01.06.2021 முதல் 30.06.2021 வரை கணக்கெடுக்கும் பணிக்கு செல்பவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க உத்தேச செலவினம் ரூ. 7,50,000/- க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்

(ந. க. எண்.453/2021/எச்.1)

தீர்மானம் எண் : 615 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு பேரிடர் மேலாண்மை கொரோனா வைரஸ் நோய் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கையாக நகராட்சி பகுதியில் 100 வீடுகளுக்கு ஒரு கணக்கெடுப்பாளர் மூலம் கொரோனா நோய் தொற்று அறிகுறிகளுடன் இருப்பவர்களை கண்டறிந்து அவர்களுக்கு RTPCR பரிசோதனை செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் செயல்முறை ஆணை ந. க. எண். 8100/2020/பே.மே நாள்.16.05.2021-ல் தெரிவித்துள்ளார்கள். மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுறுத்தலின்படி கணக்கெடுக்கும் பணிக்கு செல்பவர்கள் கொரோனா நோய் தொற்று அறிகுறியுடன் இருப்பவர்களை கண்டறிய ஏதுவாக 5 எண்ணிக்கை Infrared Thermal Scanner வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்

(ந. க. எண்.463/2021/எச்.1)

தீர்மானம் எண் : 616 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 5

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண். 7936/ஜே2/2020 நாள். 17.03.2021 கொரோனா நோய் தொற்று பாதிப்பு அதிகரித்து வருவதை தடுக்க அறிவுரைகள் வழங்கி உள்ளார். சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் காலியாகவுள்ள இரு ஒட்டுனர் பணியிடங்கள் மற்றும் பொறியில் பிரிவில் காலியாகவுள்ள ஒரு ஒட்டுனர் பணியிடம் என்ற முன்று ஒட்டுனர் பணியிடங்களை இவ்வலுவலக ந. க. எண். 652/2019/எச்.1 நாள். 30.06.2019-இன்படி 01.07.2020 முதல் 30.06.2021 வரை தனியார் வசம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கி பணி புரிந்து வருகின்றனர். ஊரடங்கு கட்டுப்பாடு அமலில் உள்ளதால், புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கிட இயலாத சூழ்நிலை உள்ளது. தற்போது பரவி வரும் கொரோனா நோய் தொற்றினை தடுக்க மேற்கண்ட 3 ஒட்டுனர் பணியாளர்களின் பங்கு அதிமுக்கியமாகிறது. பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்பனவே (Trustus out sourcing solution private limited) நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் ஒரு மாத காலம் மட்டும் ( 01.07.2021 முதல் 31.07.2021 வரை) பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கிட அதற்கான உத்தேச செலவினம் ரூ. 62,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. கொரோனா நோய் பெரும் தொற்றினை தடுக்க பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந. க. எண்.540/2020/எச்.1)

தீர்மானம் எண் : 617 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 6

சத்தியமங்கலம நகராட்சியின் 2020-2021-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் : 618 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 7

சத்தியமங்கலம் நகராட்சிப்பணியாளர்களின் பயணப்படி தயாரிக்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் : 619 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
சத்தியமங்கலம்.

நாள் :28.06.2021

2021-ஆம் ஆண்டு ஜீன் மாதம் 30.06.2021-ஆம் தேதி புதன்கிழமை மாலை 04.30 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அதற்கான பொருட்களின் விபரப்பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.

## பொருட்களின் விபரப்பட்டியல்

**பொருள் : 1**

இந்நகராட்சியின் ஆணையாளர் அவர்களின் ஜீன் 2021-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 620 பதி வு செய்யப்பட்டது. நாள் 30.06.2021

**பொருள் : 2**

இந்நகராட்சியின் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் 2021-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.1813/2017/சி1)

தீர்மானம் எண் : 621 பதி வு செய்யப்பட்டது. நாள் 30.06.2021

**பொருள் : 3**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20452/2020/எல்.எ.3 நாள்.03.04.2021 இன்படி 15 வது மத்திய நிதி குழு ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2020-2021 ஆம் ஆண்டு மில்லியன்கள் அல்லாத நகரங்களுக்கு மானியம் வழங்கப்பட்டது. "Tied Grant to Non –Million Plus Cities" **இரண்டாம் தவணையாக திட்ட நிதி ரூ.66,64,219.00 ஒதுக்கீடு செய்யப்பட்டு** இந்நகராட்சி நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளது.இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு வழிகாட்டுதல் வழங்கியுள்ளார்கள்.இதில் ஊதிய செலவினங்கள் தவிர குடிநீர் வசதிகள், திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு நிதியை பயன்படுத்தி கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. தற்பொழுது நகராட்சி குப்பை கிடங்கில் 21796.00 கன மீட்டர் அளவிற்கு பழைய குப்பைகள் அரைக்கும் பணி துவங்கப்பட்டு முடிக்கப்பட்டது. மேலும்,அண்ணா பல்கலைக்கழகம் சென்னை அவர்கள் மூலம் குப்பைகள் கணக்கீடு செய்யப்பட்டதில் கூடுதலாக 8198 கன மீட்டர் அளவிற்கு பழைய குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட திட்ட நிதி ஒதுக்கீட்டில் ரூ.64.10 இலட்சம் மட்டும் விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)15 வது நிதி குழு மான்யம் இரண்டாவது தவணையில் மேற்கண்ட பணி மேற்கொள்ளலாம், மீதமுள்ள தொகைக்கு நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண் : 622 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

**பொருள் : 4**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்கு கீழ்க்கண்ட விபரப்படி வாகன வரி காலம் முடிவடைவதால், மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு வாகன வரி புதுப்பித்துக்கொள்ள உத்தேச செலவு ரூ.7266/-க்கு நகர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | வாகன வரி முடிவடையும் நாள் | காப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN36AQ4510 | 31.03.2021 | 7266/- |
| | | **மொத்தம்** | **7266/-** |

**அலுவலக குறிப்பு :-**

1.பொது சுகாதார நலன் கருதி நகரமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 623  அனுமதிக்கப்பட்டது.  நாள் 30.06.2021**

(ந. க. எண். 351/2021/எச்.1

**பொருள் : 5**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்கு கீழ்கண்ட விவரப்படி வாகன காப்பீடு காலம் முடிவடைவதால் மேலும் ஓராண்டு காலத்திற்கு வாகன காப்பீடு புதுப்பித்துக்கொள்ள உத்தேச செலவு ரூ.39000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | வாகன வரி முடிவடையும் நாள் | காப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | TN36AQ1606 | 21.07.2021 | 19409/- |
| 2 | TN36AQ1618 | 21.07.2021 | 19409/- |
| | | **மொத்தம்** | **38818/-** |

**அலுவலக குறிப்பு :-**

1.பொது சுகாதார நலன் கருதி நகரமன்றம் அனுமதிக்கலாம்

(ந. க. எண். 472/2021/எச்.1)

**தீர்மானம் எண் : 624  அனுமதிக்கப்பட்டது.  நாள் 30.06.2021**

**பொருள் : 6**

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு பேரிடர் மேலாண்மை கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கொரோனா வைரஸ் நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்கள் இருப்பதால் அவர்களின் இருப்பிடம் கண்டறிந்து அவர்களின் குடும்பத்தினர்கள் மற்றும் நோய்த் தொற்று பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு நேரில் சென்று பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தலின் கீழ் ஸ்வாப் டெஸ்ட் எடுப்பதற்கும் லேப் டெக்னீசியன் பகுதிகளுக்கு நேரில் செல்ல ஆட்டோ ஓட்டுனருடன் தேவைப்படுகின்றது ஊதியம் வழங்கிட வேண்டி உள்ளதால் உத்தேச செலவினம்தொகை ரூ.1,00,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1.பொது சுகாதார நலன் கருதி நகரமன்றம் அனுமதிக்கலாம்

(ந. க. எண். 453/2021/எச்.1)

**தீர்மானம் எண் : 625  அனுமதிக்கப்பட்டது.  நாள் 30.06.2021**

**பொருள் : 7**

சத்தியமங்கலம் நகராட்சி கொரோனா நோய்தடுப்பு பணிக்கு தேவையான 1000 எண்ணிக்கை இரண்டடுக்கு துணி மாஸ்க் (WASHABLE&REUSABLE) சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள 18.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் அளித்துள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | விலை ரூ. GST உட்பட |
|---|---|---|---|
| 1 | MUMMY DADDY READYMADES,<br>121, BAZAAR STREET,<br>SATHYAMANGALAM-1 | 1000 | 29,500/- |
| 2 | SRI RANGANAYAKI CUT PIECE CENTRE,<br>BAZAAR STREET,<br>SATHYAMANGALAM-1 | 1000 | 32,000/- |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :-**

1. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்
2. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள MUMMY DADDY READYMADES, SATHYAMANGALAM-1 என்னும் நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 461/2021/எச்.1)

**தீர்மானம் எண் : 626  அனுமதிக்கப்பட்டது.  நாள் 30.06.2021**

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சி கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தேவையான 700 எண்ணிக்கை GLOVES (WASHABLE &REUSABLE) சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள 18.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | GLOVES (WASHABLE & REUSABLE) ஒன்றின் விலை ரூ. GST உட்பட |
|---|---|---|
| 1 | NEW KAMALESH HARDWARES,<br>86, MODACHUR ROAD,<br>GOBICHETTIPALAYAM | ரூ.40/- |
| 2 | SAGASRA STEELS,<br>18, MODACHUR ROAD,<br>GOBICHETTIPALAYAM | ரூ.43/- |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு :

1.பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2.குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள NEW KAMALESH HARDWARES, GOBICHETTIPALAYAM என்னும் நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 462/2021/எச்.1)

தீர்மானம் எண் : 627 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 9

சத்தியமங்கலம் நகராட்சி கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தேவையான 350 எண்ணிக்கை FACE SHIELD சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள 18.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | FACE SHIELD ஒன்றின் விலை ரூ. GST உட்பட |
|---|---|---|
| 1 | NEW KAMALESH HARDWARES,<br>86, MODACHUR ROAD,<br>GOBICHETTIPALAYAM | ரூ.21/- |
| 2 | SAGASRA STEELS,<br>18, MODACHUR ROAD,<br>GOBICHETTIPALAYAM | ரூ.24/- |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு :

1.பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2.குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள NEW KAMALESH HARDWARES, GOBICHETTIPALAYAM என்னும் நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 453/2021/எச்.1)

தீர்மானம் எண் : 628 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 10

சத்தியமங்கலம் நகராட்சி கொரோனா தடுப்பு பணி மேற்கொள்ள தேவையான A4 அளவு படிவங்கள் 23,000 எண்ணிக்கை மற்றும் 2x3 அடி அளவுள்ள தனிமைப்படுத்தப்பட்ட பகுதி பிளக்ஸ் பேனர் 20 எண்ணிக்கை அச்சடித்து சப்ளை செய்யும் பணி மேற்கொள் 18.06.2021 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விவரம் | விலை ரூ. (GST உட்பட) |
|---|---|---|---|
| 1 | NISHA PRINT MEEDIA<br>12, ANNA STREET-1,<br>ARIYAPPAMPALAYAM,<br>SATHYAMANGALAM. | A4 அளவு படிவங்கள் 23,000 எண்ணிக்கை மற்றும் 2x3 அடி அளவுள்ள தனிமைப்படுத்தப்பட்ட பகுதி பிளக்ஸ் பேனர் 20 எண்ணிக்கை | ரூ.29,300/- |
| 2 | BALU OFFSET PRINTERS<br>200-A EAST STREET,<br>NEAR JAISAKTHI<br>THEATRE VAIKAL MEDU<br>NEHRU NAGAR,<br>SATHYAMANGALAM. | A4 அளவு படிவங்கள் 23,000 எண்ணிக்கை மற்றும் 2x3 அடி அளவுள்ள தனிமைப்படுத்தப்பட்ட பகுதி பிளக்ஸ் பேனர் 20 எண்ணிக்கை | ரூ.26,800/- |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :**

1.பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2.குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள BALU OFFSET PRINTERS, SATHYAMANGALAM. என்னும் நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 453/2021/எச்.1)

தீர்மானம் எண் : 629 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 11

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தேவையான மருந்து Abate (Temephos 50%EC) 30 லிட்டரும், Pyrethrum 2% Exract 50 லிட்டரும் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ. 1,00,000/- நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்க நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 630 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 12

**சத்தியமங்கலம் நகராட்சி கொரோனா நோய்தடுப்பு பணிக்கு தேவையான IR THERMOMETER மற்றும் PLUSEOXYMETER வழங்கும் பணியை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள 18.06.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளன**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | **IR THERMOMETER** ஒன்றின் விலை ரூ. (GST உட்பட) | **PLUSEOXYMETER** ஒன்றின் விலை ரூ. |
|---|---|---|---|
| 1 | SRI VINAYAGA AGENCIES GOBICHETTIPALAYAM | 1182/- | 1202/- |
| 2 | SRI SIVAM PHARMA, ERODE | 1400/- | 1357/- |

இவற்றின் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு :

1. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள SRI VINAYAGA AGENCIES GOBICHETTIPALAYAM என்னும் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 453/2021/எச்.1)

தீர்மானம் எண் : 631 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட பழைய பேருந்து நிலையம், வாரச் சந்தை வணிக வளாக கடை இனம் வரும் 31.05.2021 மற்றும் 31.07.2021-ஆம் தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதால் அரசாணை எண்.(நிலை) 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) துறை நாள்.03.07.2007 ன்படி மேலும் நீடித்து கொள்வது குறித்து விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன்வைப்புத் தொகைகள் பெறப்பட்டதை தொடர்ந்து நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் 01.06.2021, 01.08.2021 ஆம் தேதிகளிலிருந்து மூன்றாண்டு முடிய அதே உரிமைதாரருக்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | விதிப்பு எண் | கடை ஏல உரிமதாரர் பெயர் | பழைய மாத வாடகை | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை | நீடிப்பு செய்து வழங்கும் வாடகை காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலைய கடை | 19 | 061/3102 | இ.ரஞ்சித் | 5100/- | 5865/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 2. | பழைய பேருந்து நிலைய கடை | 29 | 061/5002 | ச.சௌந்திரராஜன் | 6210/- | 7142/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 3. | பழைய பேருந்து நிலைய கடை | 30 | 061/5003 | ச.சௌந்திரராஜன் | 7210/- | 8292/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 4. | பழைய பேருந்து நிலைய கடை | 11 | 061/3094 | ந.மகேந்திரன் | 7600/- | 8740/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 5. | பழைய பேருந்து நிலைய கடை | 16 | 061/3099 | பி.சுமதி | 5100/- | 6018/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 6. | பழைய பேருந்து நிலைய கடை | 17 | 061/3100 | பி.சுமதி | 5100/- | 6018/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 7. | பழைய பேருந்து நிலைய கடை | 5 | 061/3089 | ஆர்.மூர்த்தி | 8100/- | 9315/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 8. | பழைய பேருந்து நிலைய கடை | 8 | 061/3092 | ச.மகேஷ்வரி | 7100/- | 8165/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 9. | பழைய பேருந்து நிலைய கடை | 9 | 061/3093 | டி.கௌரிபிரியா | 9000/- | 10350/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 10. | வாரச் சந்தை வணிக வளாக கடை | 27 | 061/4129 | மு.முகமது அனீப் | 6095/- | 7010/- | 01.06.2021 முதல் 31.05.2024 |
| 11. | வாரச் சந்தை வணிக வளாக கடை | 28 | 061/4128 | மணிகண்டன் | 6095/- | 7010/- | 01.06.2021 முதல் 31.05.2024 |

| 12. | பழைய பேருந்து நிலைய கடை | 31 | 061/5004 | நா.நளினி | 34000/- | 39100/- | 01.08.2021 முதல் 31.07.2024 |
|---|---|---|---|---|---|---|---|

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்காணும் பழைய பேருந்து நிலையம், வாரச் சந்தை வணிக வளாக கடை இனம் வரும் 31.05.2021 மற்றும் 31.07.2021-ஆம் தேதியுடன் முடிவடைவதையொட்டி, மேலும் அரசாணை எண்.92-ன் படி உரிய உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே மேற்கண்ட கடைகளுக்கு அரசாணை எண். 92-ன் படி நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீடிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. 01.06.2021-ஆம் தேதி முதல் கடைகள் உரிமம் அவசர அவசியம் கருதி புதுபித்து உத்திரவிடப்பட வேண்டியுள்ளதால் நகர்மன்ற முன்அனுமதி பெறப்பட்டு மேற்காணும் மொத்தம்-12 கடைகளையும் உரிமம் புதுபிக்க மன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1200/2020/அ3)

தீர்மானம் எண் : 632 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு கொசு ஒழிப்பு பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் VEHICLE MOUNT FOGGING மெஷின் பழுதாகிவிட்டது. மழைக்காலம் தொடங்கி விட்ட படியால் டெங்கு கொசு ஒழிப்பு பணியின் அவசியம் கருதி மேற்கண்டமெஷினை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/-க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.446/2021/எச்.1)

தீர்மானம் எண் : 633 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 15

**சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE வாகனம் TN36AM 5877 தகுதிச் சான்று பெற்று தர பணியினை மேற்கொள்ள 18.06.2021 அன்று விலை புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு நிறுவனங்கள் விலைப்புள்ளி அளித்துள்ளன.**

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | விலை ரூ. (GST உட்பட) |
|---|---|---|
| 1 | Sri Bagyalakshmi Motor Works Erode – 638003. | 20,800/- |
| 2 | Murugan Autos Erode - 638003 | 34,500/- |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு :

1. பொது சுகாதார நலன் கருதி நகரமன்ற அனுமதிக்கலாம்
2. குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Sri Bagyalakshmi Motor Works Erode என்னும் நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.353/2021/எச். 1)

தீர்மானம் எண் : 634 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 16

படிக்கப்பட்டவை : இவ்வலுவலக செயல்முறை ந. க. எண். 464/2021/எச்.1 நாள் . 21.05.2021 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு ஒப்பந்த அடிப்படையில் 55 துாய்மைப் பணியாளர் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பராமரிக்கும் பணிகளை Outsourcing ஒப்படை செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு இரு மொழிகளில்

ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ் Time of India Chennai Dipr No. 1595/Tender/2021 Date. 24.05.2021 மற்றும் செ.ம.தொ.இ.1595/ஒப்பந்தப்புள்ளி /2021 நாள். 24.05.2021 அன்று செய்தி மலரில் வெளியிடப்பட்டது. நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற இரு மொழிகளில் ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ் Times of India Chennai Dipr No. 1689/Tender/2021 Date. 08.06.2021 மற்றும் செ.ம.தொ.இ.1689/ஒப்பந்தப்புள்ளி /2021 நாள். 08.06.2021 அன்று இரத்து அறிவிப்பு தினசரி செய்தி மலரில் வெளியிடப்பட்டது. மேலும் நாளிதழில் வெளியிடப்பட்ட விளம்பரத்திற்கான "ரவி பப்ளிசிட்டி சர்வீஸ" கீழ்காணும் பட்டியல் தொகை வழங்க கோரியுள்ளார்.

| வ. எண் | செய்தி மலரில் | Invoice No | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Times of India Chennai<br>தமிழ் முரசு | Invoice No. Rps/21-22/000061 | 60375/- |
| 2 | Times of India Chennai<br>தமிழ் முரசு | Invoice No. Rps/21-22/000069 | 24150/- |
| | | மொத்தம் | 84525/- |

மேற்படி பட்டியலில் காணும் தொகையை வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**
1.நகர் மன்றம் அனுமதிக்கலாம்.
2.பொது சுகாதாரப் நலன் கருதி திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.464/2021/எச். 1)

தீர்மானம் எண் : 635 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சி 27 வார்டுகளையும் 37816 மக்கள் தொகையையும் (2011 census ) 29.24 சதுர கிலேமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள முதல் நிலை நகராட்சியாகும். 13009 வீடுகளை உள்ளடக்கியது. தினசரி 10 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் உருவாகிறது. அரசாணை நிலை எண் .101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.4.1997-இன் படி இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை 128 ஆகும். வயது முதிர்வினால் பணி ஓய்வு பெறுதல் மற்றும் பணியிடை மரணம் போன்றவற்றால் தற்போது 73 நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர்.

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை தரம்பிரித்து சேகரம் செய்தல், தெரு கூட்டுதல், சாக்கடை சுத்தம் செய்தல், சமுதாயக் கழிப்பிடம் சுத்தம் செய்தல், Mcc ல் உரம் தயாரித்தல், RRc ல் பிளாஸ்டிக் கழிவுகளை பேல் செய்து சிமென்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்புதல் மேலும் டெங்கு, கொரோனா போன்ற நோய் தடுப்பு பணிகளில் தூய்மைப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை K.Dis . NO.28369/J3 நாள்.04.12.2018-ன் படி சத்தியமங்கலம் நகராட்சியில் 105 தூய்மைப் பணியாளர்களை (Otsourcing) வெளிக்கொணர்வு முறையில் மூன்று ஆண்டுகளுக்கு பணியமர்த்திக் கொள்ள அனுமதி வழங்கியுள்ளார். தற்போது அதன் அனுமதி காலம் முடிவடைய இருப்பதால புதியதாக ஏற்பட்டுள்ள தூய்மைப் பணியாளர்களின் காலியிடத்தையும் சேர்த்து மொத்தம் 113 தூய்மைப் பணியாளர்களை (Otsourcing) வெளிக்கொணர்வு முறையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஈரோடு அவர்களால் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டும் தினக்கூலி அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்கள் மூலமாக பிரேரனை அனுப்ப நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) பொது சுகாதரப்பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக பொது சுகாதாரப்பணிகள் பாதிக்கப்படுவதால் பொது சுகாதாரப்பணிகள் அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதிக்காலம்.

தீர்மானம் எண் : 636 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 18

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்கு சொத்துவரி, காலியிடவரி செலுத்தக் கோரி பொது மக்களுக்கு 2021-22-ம் ஆண்டிற்கான கேட்பு அறிவிப்புகள் வழங்கப்பட்டது.

மேற்படி கேட்பு அறிவிப்புகள் பிரிண்ட் எடுப்பதற்கு அலுவலக பிரிண்டர் பழுதாகி விட்டதால், அவசரம் அவசியம் கருதி ஓம் முருகா ஸ்டேண்ட் ஜெராக்ஸ், சத்தியமங்கலம் மூலம் பிரிண்ட் அவுட் எடுத்து வழங்கப்பட்டது. அதற்கான கட்டணத் தொகை ரூ.5000/- க்கு ரசீது வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட தொகை ரூ. 5000/- ஐ ஓம் முருகா ஸ்டேண்ட் ஜெராக்ஸ், சத்தியமங்கலம் அவர்களுக்கு வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 865/2019/அ1)

தீர்மானம் எண் : 637 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 19

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் மற்றும் தெருவிளக்கு பணிகளுக்கு பயன்படுத்திய பழைய கேட்வால்வுகள், குழாய்கள் மற்றும் மின்சாதனங்கள் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இப்பொருட்கள் தேக்கி வைக்கப்பட்டு சுமார் ஒரு வருடங்களுக்கு மேலாகி விட்டது. ஆகவே, பழைய பொருட்களை பொது ஏலம் விட்டு நகராட்சிக்கு வருவாய் ஈடு செய்யும் பொருட்டு பொது ஏலம் விட நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**
1)மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.508/2021/இ1)

தீர்மானம் எண் : 638 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 20

ஈரோடு மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் இந்நகராட்சி பகுதி உட்பட்ட நிர்மலா தியேட்டர் ரோடு, பாக்கியலட்சுமி நகர்,பழைய தபால் ஆபீஸ் பின்புறம்,ஐயப்பர் நகர் ஆகிய பகுதியில் உள்ள ஐந்து முதல் 10 நபர்களுக்கு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் சத்தியமங்கலம் மருத்துவமனை மூலம் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு கொரோனா தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. சிகிச்சைக்காக அவர்கள் பெருந்துறை அரசு மருத்துவமனை கொரோனா சிகிச்சை பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களின் அறிவுரைகளின்படி கொரோனா தொற்று கண்டறியப்பட்டவர்களின் வீடுகளை சுற்றி ஐந்து கிலோமீட்டர் அப்பகுதி தனிமைப்படுத்தப்பட்டு சுற்றியும் தடுப்புகள் அமைத்து பொதுமக்கள் யாரும் உள்ளிலிருந்து வெளியே செல்லாமலும்,வெளி நபர்கள் உள்ளே வர கூடாது என்று அறிவுறுத்தியதன் பேரில் இந்நகராட்சிக்கு உட்பட்ட மேற்கண்ட பகுதிகள் நோய் கட்டுபடுத்தும் பகுதியாக (Containment Zone) ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. மேலும், (Containment Zone) பகுதியில் தடுப்புகள் அமைக்க சவுக்கு பூட்டுகள்,GI தகர சீட்டுகள் கொண்டு அடைக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள்.

எனவே, அவசர அவசியம் கருதி (Containment Zone) பகுதியில் இரும்பு கேட் சவுக்கு பூட்டுகள்,GI தகர சீட்டுகள் கொண்டு அடைக்க உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும்.இச்செலவினம் நகராட்சியின் பேரிடர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண். 449/2020/இ1)

தீர்மானம் எண் : 639 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 21

கோபிசெட்டிபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.013159/இ2/2019 நாள்.08.06.2021 இன்படி சத்தியமங்கலம் நகராட்சி பேருந்து நிலையத்தின் பி வகுப்பு அங்கீகாரம் புதுப்பிக்க கோரப்பட்டது அதில் சில குறைபாடுகள் தெரிவித்து அதனை சரி செய்து உடன் அறிக்கையினை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். இந்த குறைபாடுகளில் 1) பேருந்து நிலைய கட்டிடங்கள் பெயிண்டிங் இன்னும் முடியவில்லை (2) டாய்லட் கட்டணக்கழிப்பிடம் மற்றும் இலவச கழிப்பிடம் சுத்தம் செய்யப்பட வேண்டும் (உடைந்த கதவுகள் மாற்றப்பட்டு பைப்புகள் சரி செய்யப்பட்டு பக்கெட், மக்குகள் வைக்கப்பட வேண்டும். (3) டைமிங் சார்ட் பெயிண்டிங்கில் மறுபடி புதிதாக எழுதப்பட வேண்டும். (இரண்டு இடங்களில்) (4) சோடியம் லேம்ப் போடப்பட வேண்டும் 2 இடங்களில் (5) குடிநீர வசதிகள் சுத்திகரிப்பு நிலையம் ஆர்.ஒ. ஐந்து இடங்களில் வைக்கப்பட வேண்டும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட்டு அங்கீகாரம் வழங்க இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே,மேற்கண்ட குறைபாடுகள் சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :-

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்,2021-2022 ஆம் ஆண்டு திருத்திய வரவு -செலவு பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம்.

(கட்டு எண். 100/2016/இ1)

தீர்மானம் எண் : 640 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 22

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் லாரி எண்.TN 36 Y 0200 வாகனம் தற்பொழுது இயக்கப்படுவது இல்லை. இருப்பினும் வட்டார போக்குவரத்து துறையால் சாலை வரி கட்ட வேண்டும் என வாகனத்தின் ஓட்டுநர் விண்ணபத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. எனவே,மேற்கண்ட குடிநீர் டேங்கர் லாரி வாகனத்திற்கு சாலைவரி 01.07.2021 முதல் 30.6.2022 வரை 2021-2022 ஆம் ஆண்டிற்கு சாலை வரி வட்டார போக்குவரத்து கழகத்திற்கு ரூ.11600-/- தொகையினை செலுத்தப்பட வேண்டும். எனவே, இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை 2021-2022 ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர் மன்றத்தின் முன் அனுமதி பெற்று சாலை வரி செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கட்டு எண்.564/2020/இ1)

தீர்மானம் எண் : 641 அனுமதிக்கப்பட்டது. நாள் 30.06.2021

பொருள் : 23

மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 7950/2021/பஆ1 நாள். 21.06.2021 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி 2021-2022-ஆம் நிதியாண்டுக்கு உரிய இந்திய செஞ்சிலுவை சங்க ஈரோடு மாவட்ட கிளைக்கு ஆண்டு சந்தா தொகை செலுத்த ரூ. 2500/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1.மன்றம் அங்கீகரிக்கலாம்.
2.இந்திய செஞ்சிலுவைச் சங்கம் அரசு சார்ந்த நிறுவனம் ஆதலால் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந. க. எண். 440/2015/எச்.1)

தீர்மானம் எண் : 642 அங்கீகரிக்கப்பட்டது. நாள் 30.06.2021

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி.